2014 டிசம்பர் 8] [திருமதி பா. வளர்மதி]

அளவிலான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பல கோடி ரூபாய் அரசுக்குச் சேமிப்பு ஏற்பட்டதைப் போல, இந்த ஆண்டும் 6 மாத காலத்தில் சேமிப்பு வரக்கூடும் என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, ஊடகங்கள், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் எல்லாம் மகா ஊழல், மெகா ஊழல் என்று வெளியிலே பத்திரிகைகளுக்குப் பேட்டியும் தந்து கொண்டிருக்கிறார்கள். ஊழலைப் பற்றி யார் பேசுவது? இன்றைக்குக் காலையிலேகூட திரு. கருணாநிதி அவர்களின் குடும்பப் பத்திரிகையிலே சத்து மாவைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. தவறான செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறீர்கள். மக்கள் மத்தியிலே நீங்கள் விரட்டப்பட்டிருக்கிறீர்கள்; நாடாளுமன்றத் தேர்தலிலே நீங்கள் முட்டை வாங்கினீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாடாளுமன்றத் தேர்தலிலே நீங்கள் முட்டை வாங்கினீர்கள். முட்டையைப் பற்றிப் பேசுவதற்கு உங்களுக்கு எந்தத் தகுதியும் கிடையாது. இரண்டாவது, ஊழலைப் பற்றிப் பேசுவதற்கு உங்களுக்கு யோக்கியதை இல்லை. வீராணத்திலே ஆரம்பித்து வால்வோ வரைக்கும் சந்தி சிரித்துக்கொண்டிருக்கிறது. மகா ஊழலைப் பற்றி, மெகா ஊழலைப் பற்றிப் பேசுவதற்கு உங்களுக்கு எந்த யோக்கியதையும் இல்லை, அருகதையும் இல்லை. முட்டை கொள்முதல் விலையின்மூலம் அரசுக்குச் சேமிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தவறான தகவலைச் சொல்லிச் சொல்லி மக்கள் மனதிலே இடம் பிடித்துவிடலாம் என்ற எண்ணத்தை நீங்கள் தயவுசெய்து நீக்கிக் கொள்ளுங்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடு) டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *தென்மாவட்டங்களில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்போதுதான் ஒரு பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக் கொண்டேன். (குறுக்கீடு) பிறகு என்ன? (குறுக்கீடு) அதெல்லாம் இல்லை, ஏற்கெனவே உங்களிடம் நான் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) அனுமதியில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை. நீங்கள் உங்காருங்கள். திரு. சு. குணசேகரன், என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு) இருங்கள், வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு)*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர் கிருஷ்ணசாமி, உங்களுக்கு வாய்ப்பில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். திரு. சு. குணசேகரன், சொல்லுங்கள்.*

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியாறு அணையில் 142 அடி உயரம் வரை தண்ணீரைத் தேக்கியதற்குப் பிறகும், சிவகங்கை மாவட்டத்தில் இருக்கக்கூடிய 5 கால்வாய்கள்மூலம் 132 கண்மாய்களுக்கு இதுவரை தண்ணீர் கிடைக்காமல், விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக அந்தக் கண்மாய்களுக்குத் தண்ணீர் கிடைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. அ. சவுந்தரராசன், என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)*

***திரு. அ. சவுந்தரராசன்:** *நான் கடந்த வெள்ளிக்கிழமை அன்று . . .(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை, அவரைத்தான் நான்* allow *செய்கிறேனே, பிறகு*

2014 டிசம்பர் 8] [பேரவைத் தலைவர்]

என்ன? (குறுக்கீடு) உங்கள் கட்சித் தலைவரைத்தான் பேச அனுமதித்திருக்கிறேனே, பிறகு என்ன?

திரு. அ. சவுந்தரராசன்: *நான் கடந்த வெள்ளிக்கிழமை அன்றே அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கான ஊதிய ஒப்பந்தம் 15 மாத காலமாக நிலுவையில் இருப்பதால். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனுமதியில்லை. அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கான ஊதிய ஒப்பந்தம் குறித்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை, ஒவ்வொரு பிரச்சினையாகத்தான் எழுப்ப வேண்டும். நீங்கள் எழுந்து 10 பிரச்சினைகளை ஒரே நேரத்தில் எழுப்பினால் எப்படி? (குறுக்கீடு) இல்லை, இப்படி எழுந்திருப்பது முறையல்ல. நான், உங்களுக்கு ஒரு பிரச்சினையை எழுப்புவதற்குத்தான் அனுமதி அளித்தேன். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) அரசின் பரிசீலனையில் இருக்கிறது, உட்காருங்கள். திரு. அர. சக்கரபாணி, என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சித் தலைவருக்குப் பேசுவதற்கு அனுமதி கொடுத்துவிட்டேன்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனுமதியில்லை, ஒரு கட்சியில் ஒருவருக்குத்தான் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்க முடியும். எல்லா கட்சிகளிலும் எல்லா உறுப்பினர்களுக்கும் வாய்ப்புக் கொடுக்க முடியாது. (குறுக்கீடு) திரு. அர. சக்கரபாணி, உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்களின் ஆட்சியில் எனது ஒட்டன்சத்திரம் தொகுதியில் கொத்தயம் என்ற இடத்தில் நல்லதங்காள் ஆற்றின் குறுக்கே அணை கட்ட ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் 90 சதவிகிதப் பணி முடிந்துவிட்டது. இன்னும் 10 சதவிகிதப் பணி நிலுவையில் இருக்கிறது. நில உரிமையாளருக்குப் பணம் கொடுக்காததால், பணி முடிவுறாமல், வடகிழக்குப் பருவமழை பெய்து தண்ணீர் முழுவதும் வீணாகக் கடலில் போய் கலக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர்*

அவர்கள் அந்தப் பணியை விரைந்து முடித்துத் தருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, சொல்லுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியில் ஆளும் பாரதிய ஜனதா கட்சி பொது விநியோகத் துறையின் மூலமாக மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருவதை தற்பொழுது முழுமையாக நிறுத்தியுள்ளது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவற்றுக்கெல்லாம் பதில் சொல்லியிருக்கிறார்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. எல். வெங்கடேசன், என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள்.*

***திரு. எல். வெங்கடேசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ராபி பருவ காலமாக இருப்பதால், எங்கள் மாவட்டத்திலிருக்கிற 237 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் யூரியா கிடைக்காமல் விவசாயிகள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, உட்காருங்கள்.*

திரு. எல். வெங்கடேசன்: *எனவே, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினுடைய கவனத்தை ஈர்த்தாகிவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, ஒவ்வொரு கட்சியிலும் 2, 3 பேரை அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) 2, 3 பேரை அனுமதிக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனுமதியில்லை. 2 மணிக்குள் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை வாக்கெடுப்பிற்கு*

விட வேண்டும். நீங்கள் உட்காருங்கள். திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) இப்படி ஆளாளுக்கு எழுந்து நின்று பேசினால் எப்படி? (குறுக்கீடுகள்) நான் சட்டமன்றக் கட்சித் தலைவர்களுக்கு அனுமதி கொடுத்தேன்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கட்சித் தலைவர்கள் ஒவ்வொரு பிரச்சினையாக எழுப்பலாம். (குறுக்கீடுகள்) இதுபோன்று ஆளாளுக்கு எழுந்து, ஒவ்வொரு பிரச்சினையாக எழுப்ப முயன்றால், நான் எப்படி சபையை நடத்துவது? (குறுக்கீடுகள்) அனைவருக்கும் வாய்ப்புக் கொடுத்தால், எப்படி நான் சபையை நடத்த முடியும்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கூடுதல் செலவிற்கான இரண்டாவது துணை மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், பதிலுரையும் முடிவுற்று, பிற்பகல் இரண்டு மணிக்குள் அது நிறைவேற்றப்பெற வேண்டும். எனவே, காலத்தின் அவசியத்தை உணர்ந்து, அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்பு தரும்படி கேட்டுக்கொள்கிறேன். எல்லோரும் ஒரே நேரத்தில் எழுந்து நின்று பேசுவதால், யார் என்ன சொல்கிறார்கள் என்பதுகூட புரியாமல் போய்விடுகிறது. ஆகவே, கட்சிக்கு ஒருவர்வீதம் வாய்ப்பு கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஏற்கெனவே நான் வாய்ப்புக் கொடுத்துவிட்டேன்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *உங்கள் அனைவருக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்*

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2014 டிசம்பர் 8

ஏற்கெனவே வாய்ப்பு வழங்கிவிட்டார். ஆகவே, அடுத்த அலுவலுக்குச் செல்லும்படி கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்புக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

3. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.*

***திரு. பி.வி. கதிரவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 224 முதல் 233 வரையிலான 10 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினம் காத்து நிற்கும் தமிழர் குல சாமி, மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களை வணங்குகிறேன். (குறுக்கீடு)*

திரு. சுப. தங்கவேலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*